


ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 156வது வார்டு, முகலிவாக்கத்தில் எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.52.54 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் ஜெ. செல்வேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாஸ்கரன், கீதா ஆனந்தன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.



எழும்பூர் வடக்கு பகுதி,78 (அ) வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு அமைச்சர் பி.கே. சேகர் பாபு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சிக்கு 78(அ)வட்ட கழக செயலாளர் நா.பாலு தலைமை வகித்தார். பகுதி கழக செயலாளர் சொ.வேலு முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் வி. சுதாகர்,புனிதவதி எத்திராசன்,கே.எஸ். ரவிச்சந்திரன்,பரிதி இளம் சுருதி,கே.எஸ். எம்.நாதன்,புரசை தாமோதரன்,கா. நந்தீஸ்வரன், தில்லை குமார், சூலை சுப்புராயலு, கா.வினோத் உள்ளிட்ட வட்ட கழகச் செயலாளர்கள் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதல்வர் – தலைவர் உத்தரவின்படி ‘‘ஓரணியில் தமிழ்நாடு’’ முன்னெடுப்பின் கீழ்

# திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளில் கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கும் மாபெரும் முகாம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் கழகத்திற்கு பாகம் வாரியாக உறுப்பினர் சேர்த்தல் பணி (20.06.2025 - வெள்ளிக்கிழமை) அன்று காலை 8.00 மணி அளவில் நடைபெறும். இந்த உறுப்பினர் சேர்த்தல் முகாமிற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் இப்பணியினை கீழ்கண்ட அட்டவணையின் படி கழகத்திற்கு பாகம் வாரியாக உறுப்பினர் தேர்த்தல் பணியினை செய்திடுவீர்.

| வரிசை எண் | இடம் | தலைமை | துவக்கி வைப்பவர்கள் |
|---|---|---|---|
| 1 | ஆவடி தெற்கு பகுதி வசந்தம் நகர் – 43 | கு.ராஜேந்திரன் | மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்<br>மாவட்ட துணை செயலாளர் V.J.சீனிவாசன் |
| 2 | பூவிருந்தவல்லி நகரம் | G.R.திருமலை | மாநில ஆதி திராவிட நலக் குழு செயலாளர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ கிருஷ்ணசாமி<br>மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் K.சுரேஷ்குமார் |
| 3 | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் (காக்களூர்) | ஜெயசீலன் | மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி |
| 4 | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் (செவ்வாப்பேட்டை) | பிரேம் ஆனந்த் | தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை K.J.ரமேஷ் |
| 5 | ஆவடி மேற்கு பகுதி முத்தாபுதுப்பேட்டை | பொன் விஜயன் | மாவட்ட துணை செயலாளர் ஜெயபால் |
| 6 | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் (வெங்கல்) | தங்கம் முரளி | மாவட்ட துணை செயலாளர் காயத்ரி ஸ்ரீதர் |
| 7 | ஆவடி கிழக்கு பகுதி (வார்டு 9) | பேபி சேகர் | மாவட்ட பொருளாளர் நரேஷ்குமார் |
| 8 | திருவேற்காடு நகரம் (வார்டு 8) | NEK.மூர்த்தி | தலைமை பொதுக்குழு உறுப்பினர் எத்திராஜ் |
| 9 | திருநின்றவூர் நகரம் (திருநின்றவூர் மார்கெட்) | தி.வை.ரவி | தலைமை பொதுக்குழு உறுப்பினர் குமார்<br>மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தியாகராஜன் |
| 10 | திருமழிசை பேரூர் (சன்னதி தெரு) | முனுசாமி | தலைமை பொதுக்குழு உறுப்பினர் விமல் வர்ஷன் |
| 11 | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் (நசரத்பேட்டை) | கமலேஷ் | தலைமை பொதுக்குழு உறுப்பினர் சங்கர்<br>காஞ்சனா சுதாகர் |
| 12 | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் (ஈக்காடு) | மாநில ஆதி திராவிட நலக் குழு செயலாளர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி | தலைமை பொதுக்குழு உறுப்பினர் மகாதேவன்<br>மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சங்கீதா ஸ்ரீனிவாசன் |
| 13 | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் (நேமம்) | தேசிங்கு | தலைமை பொதுக்குழு உறுப்பினர் முத்தமிழ்செல்வன்<br>மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்காபிரசாத் |
| 14 | ஆவடி வடக்கு பகுதி காந்தி நகர் | நாராயண பிரசாத் | மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் நாகூர்கனி |

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட - 5 சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் பணிகள் குறித்து - ஆ.இராசா எம்.பி ஆய்வு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் இன்று (09.06. 2025 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி வேளச்சேரி, 11.30 மணி சோழிங்கநல்லூர், 3.30 மணி மதுரவாயில், 4.30 மணி விருகம்பாக்கம், 5.30 மணி சைதாப்பேட்டை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் கழக துணைபொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

ஆகவே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி நிரல்படி அந்தந்த இடங்களில் குறிப்பிட்ட சரியான நேரத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

“ஆரிய மாடல் வீழ்த்தும்; திராவிட மாடல் உயர்த்தும்”

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் மாணவர் வாசகர் சந்திப்பு!



சென்னை,ஜூன்.9-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 07.06.2025 அன்று 115 வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் தி.கோகுல் கலந்துகொண்டு, புத்தக வாசிப்பின் அவசியம், கல்விக்கு கழக அரசு அளிக்கும் முக்கியத்துவம் குறித்தும் பேசினார். “இல்லம் தேடிக் கல்வி, காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் என எண்ணற்றத் திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. சமீபத்தில் கல்வராயன் மலைப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மாணவி ராஜேஷ்வரி ஐஐடியில் படிக்க தேர்வு பெற்றுள்ளார். அவருடைய உயர் கல்வி செலவை கழக அரசே ஏற்கும் என்று நமது முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அரசுப் பள்ளி மாணவர்கள் ஐ.ஐ.டி.யை நோக்கி செல்ல வைப்பதுதான் நமது திராவிட மாடல். ஆனால் 3ஆம் வகுப்பிலேயே பொதுத் தேர்வு வைத்து, நம்மை கல்வியில் இருந்து வெளியேற்ற துடிப்பதுதான் ஆரிய மாடல்” என்றார்.

வருகை தந்த மாணவர்களுக்கு நிகழ்ச்சியின் நிறைவில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘கலைஞரும் நானும்’ நூல் வழங்கப்பட்டது.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ப.பாலசந்தர், வி.தினேஷ்குமார், பகுதி அமைப்பாளர் ஜெ.கிரிதரன், பகுதி துணை அமைப்பாளர் ஆர். மனோஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில்

# செம்மொழி நாளை முன்னிட்டு குழந்தைகள் காப்பகத்தில் நல உதவிகள்!

## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, ஜூன். 9 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு சென்டார் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி, 17 வது வட்டம், தீயம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள செல்டார் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கு காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு,17 வது வட்ட செயலாளர் கே. கருணாகரன் தலைமை தாங்கினார்.

காப்பகத்தில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு காலை உணவு மற்றும் நோட்டு புத்தகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி.பாலாஜி, சி.மூர்த்தி, வி.பார்த்தசாரதி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகப்ரியன், இ.சுதர்சன், எம். ஜான்சன், ஜி.பூபாலன், காந்தி நகர் சுந்தரம், வாசு, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எஸ்.ஜோசப், வடபெரும்பாக்கம் மைக்கேல், செந்தில், கார்த்திக், கோவிந்தன், முனிவேல், கமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு, 17 வது வட்டம், தீயம்பாக்கம் பகுதியில் உள்ள செல்டர் குழந்தைகள் காப்பகத்தில் வசிக்கக்கூடிய குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. 17 வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் சி.மூர்த்தி, சி.பாலாஜி, எம்.என்.அஜய் தென்னவன், கே.சண்முகப்ரியன், இ.சுதர்சன், எம்.ஜான்சன், எஸ்.ஜோசப், ஜி.பூபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

சை.மு.சேகர் தலைமையில் எம்.கிருஷ்ணமூர்த்தி - எம்.ஸ்ரீதரன் முன்னிலையில்

# சைதை மேற்கு 139 அ வட்டத்தில் செம்மொழி நாள் விழா : 1000 பேருக்கு உணவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்! மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 9 -

சைதை மேற்கு பகுதி 139 அ வட்டக் கிளை சார்பில் செம்மொழி நாயகர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் முன்னிட்டு ஜுன் 8 ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு மேற்கு ஜோன்ஸ் சாலை, வி.எஸ்.எம்.தோட்டத்தெரு சந்திப்பில் வட்டச்செயலாளர்.சை. மு. சேகர். எம். ஏ. தலைமையில் பகுதி செயலாளர்.எம்.கிருஷ்ண மூர்த்தி. தலைமை பொதுக்குழு உறுப்பினர். வழக்கறிஞர். எம்.ஸ்ரீதரன்.எம்.சி. மாநில துணை செயலாளர். எம். எஸ். ஹரி பாபு.பி. இ மா. பி.டி.என்.சிவமணி, முன்னிலையில் இ.வரதன், பி.எஸ்.பிரகாஷ், வரவேற்றிட மாவட்ட செயலாளர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். துணை மேயர். மு. மகேஷ்குமார், ஆகியோர் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினர்.

நிகழ்ச்சியில் பங்கேற்றோர். மின்னல் கந்தப்பன், களக்காடி. எல்லப்பன், வி.பி. ஜானகிராமன்,சைதை.த.சம்பத், சைதை.ஆர். ரமேஷ்,சைதை. சாதிக். ந.தமிழரசு.அட்கோ.கமலநாதன், ஆர்.கிருஷ்ணகுமார், நா. மணிகண்டன், ஜி. கே.ராமசந்திரன், டி.கோபால கிருஷ்ணன், யமஹா.ராஜேஷ். கே.விஜயகுமார், வி.வாசுதேவன், எஸ்.கண்ணன்,ப.எழிலரசன், ஆர்.தாமோதரன்,ஜிம்.க.பிரபு, பூ.பாஸ்கர், துளசி சந்திரசேகர், இ.வ.ரகுபதி, ஆட்டோ.சேகர், த.சேகர், கே.வெங்கடேசன், ஜி.தங்கராஜ், டி.சரவணன், என்.எஸ். கார்த்திக்,த.வின்சென்ட், எஸ். அருண்குமார், மூ. வினோத்கண்ணா, மூ. கௌதம், ப. தினகரன்,ஜி.ரஞ்சித், எஸ்.பி.தினேஷ்குமார், உ. மகேஷ், எஸ் முருகன், என். சண்முகம், மு.மூர்த்தி, கா. மூர்த்தி, ஆர். கண்ணன் ப. மோகன்,ஆர்.கன்னியப்பன், எஸ்.ராஜேந்திரன், கே. பூபதி, ஏ.எம்.சேகர், ஜெ.வெங்கடேசன், பு.உதயநிதி, கே.ராஜேந்திரன், எஸ்.ரமேஷ்,ஏ.சிவகுமார், மற்றும் பலர் பங்கேற்றனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாளையொட்டி சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்ப்பாட்டில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நல்லூர் ஊராட்சி சிவந்தி ஆதித்தன் நகர் பகுதியில் உள்ள பத்தாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகையும் நலதிட்டங்களும் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையிலும் மாவட்ட அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையிலும் வழங்கப்பட்டது. இதில் மு.சீனிவாசன், இரா.கிருஷ்ண மூர்த்தி, நா.பரசுராமன், மா.சோமசுந்தரம், செ.யுவராஜ், மணலி எஸ். ஸ்டாலின், ஆர்.சி.சிவசங்கரன், குறளரசன், மணிமாறன், ரூபேஷ் இளைஞரணி நிர்வாகிகள் ஜீவா, கார்த்திக்ராஜா, தமிழரசன், நித்தியானந்தம், நரேந்திரபாபு, ஹரிஷ், விக்கி, ஹரி, லோகேஷ், கவின், பிரகாஷ், தமிம் அன்ஹாரி, அபு, சந்தோஷ், கரிம்முல்லா, முகேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.